DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.
**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -19

| | | |
|---|---|---|
| Name | : திரு. முருகானந்தம் | Caste: |
| Father's Name: | திரு. பத்மநாபன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 10th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8 and A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**Date: 10.01.2024**

**முதல் விசாரணை**

நான் வங்குடி கிராமத்தில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். இறந்துபோன காசிநாதன், தர்மலிங்கம், மகாலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோரை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள் மற்றும் உறவினர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களும் எனது ஊரை சேர்ந்தவர்கள் மற்றும் உறவினர்கள்.

16.05.2008 அன்று காலை சுமார் 9.00 மணியளவில் நான், சிவகொழுந்து மகன் அருள், கொளஞ்சி மகன் சுபாஷ் ஆகியோர் ஜானகியம்மாள் வீட்டிற்கு பக்கத்திலுள்ள வேப்ப மரத்தின் திண்ணையில் அமர்ந்து பேசிகொண்டிருந்தோம். ராஜலிங்கம் வீட்டில் சாப்பிட்டிற்கு அரிசி இல்லை என்று சொன்னதால் நானும், அருளும் அவரது வீட்டிற்கு அரிசி எடுத்துகொண்டு போயிருந்தோம். ஜானகியம்மாள் எங்களிடம் அவரது மகன்கள் குளிக்க போயிருப்பதாகவும், சிறிது நேரத்தில் அவர்கள் வந்துவிடுவார்கள் என்றும், தான்

சமைப்பதாகவும், சாப்பிட்டுவிட்டு போகும்படியும் என்னிடம் சொன்னார்.

அதிலிருந்து சுமார் 15, 20 நிமிடங்களுக்குள்ளாக கிழக்கு பக்கம் இருந்து சத்தம் கேட்டது. ராஜலிங்கம் அந்தபக்கம் இருந்து ஓடிவந்தார். அவர் எனது பெரியப்பா ஆன துரைசெல்வத்தின் வீட்டிற்குள் ஓடிவிட்டார். அப்போது தர்மலிங்கம் அவரது வீட்டிலிருந்து வெளியே வந்தார். அப்போது எதிரி சக்திவேல் மகன் ரமேஷ், பாஸ்கரன் ஆகிய இருவரும் பூராசாமி கடைக்கு எதிரில் வைத்து தர்மலிங்கத்தை வெட்டினார்கள்.

அதற்குள்ளாக எனது பெரியப்பா அந்த இடத்திற்கு ஓடிவந்து என் பிள்ளையை விட்டுவிடு என்று கையெடுத்து கும்பிட்டார். அப்போது எதிரிகள் திருவாளபுத்தூர் ரமேசும், குணபாலன் மகன் சிலம்பரசனும் காசிநாதனை வெட்டினார்கள். எதிரி சக்திவேல் மகன் ரமேஷ் தர்மலிங்கத்தின் தலையை துண்டித்து எடுத்துக்கொண்டு காளியம்மன் கோவிலுக்கு பக்கத்தில் சென்றார். அப்படி போகும் போது ஜானகியம்மாள் வந்து தடுத்தார்.

அப்போது எதிரி திருவாளபுத்தூர் ரமேஷ் ஜானகியை வெட்டினார். ஜானகியம்மாள் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டார். அவர் கீழே விழுந்தவுடன் நாங்கள் பயந்துகொண்டு ஓடிவிட்டோம். சம்பவம் முடிந்து ஒருமணிநேரம் கழித்து மீன்சுருட்டி காவல்நிலையத்திலிருந்து போலிசார் வந்தார்கள். நாங்கள் சென்று பார்த்தபோது காசிநாதன் குடல்சரிந்து இறந்துகிடந்தார். ஜானகியம்மாளுக்கு உயிர் இருந்தது.

ஜானகியம்மாளை போலிஸ் வாகனத்தில் சரோஜாவும், ஜானகியின் தம்பி சேகர் என்பவரும் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். ஜானகியின் தம்பியின் பெயர் தனக்கு சரியாக நினைவில்லை என்று சாட்சி சுயமாக கூறுகிறார். சம்பவம் நடந்த மறுதினம் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்த தினத்தன்று காலை சுமார் 11.00 மணிக்கு போலிசார் வந்தார்கள். அப்போது வங்குடிகிராம வி.ஏ.ஓ மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் நான் அவர்களை பார்க்கவில்லை.

கடைவைத்துள்ள பூராசாமி உள்ளூரை சேர்ந்தவர்தான். போலிசார் வந்தபோது பூராசாமியும் அங்கு இருந்தார் என்றால் அவரை நான் கவனிக்கவில்லை. போலிசார் சம்பவத்தினத்தன்றே காலை 11.00 மணியளவில் எதிரிகள் திருஞானம், பழனிசாமி, ராஜதுரை, பிரபாகரன், சசிகலா, கனகவள்ளி, தினேஷ், திருவாளபுத்தூர் ரமேஷ் ஆகியோரை காவல்நிலையத்திற்கு கொண்டுபோய்விட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

சம்பவதினத்தன்று போலிசார் என்னை விசாரிக்கவில்லை. மறுநான் விசாரித்தார்கள். எத்தனை போலிசார் ஊருக்கு வந்தார்கள் என்றால் சுமார் 300 க்கும் மேற்பட்டோர்கள் வந்தார்கள். சுமார் ஒருமாதம் 300 போலிசார் ஊரில் காவலில் இருந்தார்கள். சம்பவதினத்தன்று ஊரில் இருந்த போலிசாரிடம் சென்று நான் எனக்கு தெரிந்த சங்கதிகளை சொல்லுவதற்கு முயற்சி செய்யவில்லையா என்றால் நான் சம்பவத்தை பார்த்த பதற்றத்தில் இருந்ததால் முயற்சி செய்யவில்லை.

போலிசார் என்னை மறுதினம் விசாரித்தபோது முதல் நாள் நான் பதற்றத்தில் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களான ஆயுதங்களை சம்பவத்தினத்தன்றே ஊரிலிருந்து எடுத்துசென்றுவிட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. பதற்றத்தில தான் உட்கார்ந்துவிட்டதாக சாட்சி சுயமாக சொல்லுகிறார். எங்கு உட்கார்ந்திருந்தேன் என்றால் துரைசெல்வம் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தேன். நானும், அருள் என்பவரும் உட்கார்ந்திருந்தோம்.

பிற்பகல் 12.00 மணியிலிருந்து 3.00 மணிவரை அங்கு உட்கார்ந்திருந்தோம். எப்போது எனக்கு பதற்றம் தணிந்தது என்றால் இறந்தவர்களின் உடல்களானது அடக்கம் செய்யப்பட்டதற்கு பின்னிட்டு தான் ஓரளவிற்கு பதற்றம் தெளிந்தது. இறந்தவர்களின் உடல்கள் சம்பவஇடங்களிலிருந்து போலிசாரால் எடுத்துசெல்லப்பட்டபோது பிற்பகல் சுமார் 2.00 மணி இருக்கும். நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்தில் சுமார் 30, 40 போலிசார் இருந்தார்கள்.

அப்போது போலிசார் யார்யாரை சாட்சிகளாக விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. அப்போது எனது ஊரை சார்ந்த யாரும்போலிசாரை பார்த்து நடந்த

சங்கதிகளை சொல்லுவதற்கு முயற்சி செய்யவில்லையா என்றால் நான் பார்க்க யாரும் அவ்வாறு முயற்சி செய்யவில்லை. போலிசார் விசாரணையில் சம்பம் நடந்த கொஞ்ச நேரத்தில் போலிசார் சம்பவஇடத்திற்கு வந்துவிட்டதாக சொல்லியிருக்கிறேன். சம்பவம் நடந்து ஒருமணி நேரத்தில் போலிசார் வந்துவிட்டதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நானும், அருளும் சம்பவதினத்தன்று தர்மலிங்கம் வீட்டிற்கு சாப்பாட்டிற்கு அரிசி கொண்டு சென்றதாகவும், அப்போது ஜானகி எங்களிடம் அவரது மகன்கள் குளிப்பதற்காக போயிருப்பதாகவும், சிறிது நேரத்தில் அவர்கள் வந்துவிடுவார்கள் என்றும், சாப்பிட்டுவிட்டு போகும்படி சொன்னதாகவும் நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. கிழக்குபக்கம் இருந்து சத்தம்கேட்டதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சத்தம்கேட்டதாக மட்டும் சொல்லியிருக்கிறேன்.

ராஜலிங்கம் ஓடிவந்து எனது பெரியப்பா துரைசெல்வம் வீட்டிற்குள் நுழைந்துவிட்டார் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. அப்போது தர்மலிங்கம் அவரது வீட்டிலிருந்து வெளியே வந்தார் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. சக்திவேல் மகன் ரமேஷ், பாஸ்கரன் ஆகிய எதிரிகள் தர்மலிங்கத்தை பூராசாமி கடையின் முன்புறம் வைத்து வெட்டியதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் வெட்டியதாக சொல்லியிருக்கிறேன். எந்த இடத்தில் வைத்து வெட்டினார்கள் என்று சொல்லவில்லை.

காசிநாதன் எதிரிகளை பார்த்து கையெடுத்து கும்பிட்டார் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. சம்பவத்தை பார்த்து பயந்துகொண்டு நாங்கள் ஓடிவிட்டோம் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். நான், அருள், சுபாஷ் ஆகியோர் ஓடிவிட்டோம். எங்கள் ஊரில் காசிநாதன் தலைமையில் ஒரு தரப்பினரும், எதிரிகள் ஒரு தரப்பாகவும் இருந்து வந்ததாக நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், எல்லோரும் ஒற்றுமையாகத்தான் இருந்தார்கள்

என்றாலும் சரியல்ல. தேசிங்குபாலன் கொலைவழக்கில் ராஜலிங்கம், காசிநாதன், தர்மலிங்கம் மற்றும் காசிநாதனின் இதர மகன்கள் ஆகியோர் எதிரிகளாக சேர்க்கப்பட்டிருந்தார்கள்.

எதிரிகளும், காசிநாதன் குடும்பத்தினரும் எனது உறவினர்கள் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. சம்பவ சமயத்தில் கொளஞ்சி மகன் சுபாஷ் என்பவர் 8 ஆம் வகுப்பு படித்துகொண்டிருந்தார். சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றாலும், சம்பவத்தை பார்த்து நான் பதற்றம் அடைந்துவிட்டதால் அன்றைய தினம் நான் போலிசாரிடம் உண்மை சங்கதிகளை சொல்லவில்லை என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளவாறு சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எந்த சம்பவத்தையும் நான் பார்க்கவில்லை என்றாலும் அதனால் தான் நான் சம்பவதினத்தன்று போலிசாரிடம் எந்த சங்கதிகளையும் தெரிவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்த மறுதினம் போலிசார் என்னை விசாரித்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>13 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் காளியம்மன் கோவில் தெருவில் கிழக்கு பக்கமாக வசிக்கிறேன். எனது வீட்டிற்கும் காசிநாதன் வீட்டிற்கும் இடையே 100 மீட்டர் தொலைவு இருக்கும். காசிநாதன் வீடானது கிழமேல் தெருவில் இருக்கிறது. நான் குடியிருக்கும் தெருவும் கிழமேல் வீதிதான். போலிசார் விசாரணையில் நான், அருள், சுபாஷ் ஆகியோர் ஜானகி வீட்டு பக்கத்திலுள்ள வேப்ப மர திண்ணையில் அமர்ந்து பேசிகொண்டிருந்ததாக சொல்லியிருக்கிறேன்.

அந்த வேப்பமரம் காசிநாதன் வீட்டிற்கு முன்பாகவே இருக்கிறது. வாசலுக்கு பக்கத்திலேயே இருக்கிறது. நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து பூராசாமி கடையானது கிழக்கு பக்கம் சுமார் 20, 30 அடி துாரத்தில் உள்ளது. தர்மலிங்கத்தைதான் முதலில் வெட்டினார்கள். அதன்பிறகு தான் காசிநாதனை வெட்டினார்கள்.

தர்மலிங்கம் அவரது வீட்டிலிருந்து கிழக்குநோக்கி ஓடி பூராசாமி கடையின் அருகே வைத்து எதிரிகளிடம் வெட்டாதீர்கள் என்று சொன்னார். அப்போது காசிநாதன் மற்றும் ஜானகி ஆகிய இருவரும் அவர்களது வீட்டின் உள்ளே இருந்து வெளியே வந்தார்கள்.

நாங்கள் எதிரிகள் வெட்டுவதை நாங்கள் சென்று தடுக்கவில்லையா என்றால் ராஜலிங்கம் ஓடிவந்தபோது எங்களை பார்த்து ஓடிவிடுங்கள் என்று சொன்னதால் நான் சென்று காசிநாதன் வீட்டின் பின்புறம் மறைந்துகொண்டேன். நான் எதிரிகளை தடுக்கவில்லை. எதிரிகள் காசிநாதனையும், தர்மலிங்கத்தையும் வெட்டியதிற்கு பிறகு மேற்குநோக்கி காளியம்மன் கோவிலுக்கு போய்விட்டார்கள்.

சம்பவ சமயத்தில் நான் விருதாசலத்தை சேர்ந்த சண்முகம் என்பவரிடம் ரோடு ரோலர் வண்டி ஓட்டிகொண்டிருந்தேன். சம்பவதினத்தன்று நான் வேலைக்கு போகவில்லையென்றும், ஊரில் தான் இருந்தேன் என்றும் சாட்சி சுயமாக சொல்லுகிறார். முதல்விசாரணையில் நான் சொல்லியுள்ள சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

எனக்கு தெரிந்த வழக்கு சங்கதிகள் அனைத்தையும் எனது முதல்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். விட்டுபோன சங்கதிகள் எதாவது இருக்கிறதா என்றால் இல்லை. சம்பவதினத்தன்று நான் ஊரில் இல்லை என்றாலும், நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும், இறந்துபோனவர்கள் எனது உறவினர்கள் என்பதால் போலிசார் சொல்லிகொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>6 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காசிநாதன் எனது பெரியப்பா. அருள், சுபாஷ் ஆகியோரும் எனது பங்காளிகள் தான். காசிநாதன் வீட்டிற்கு பக்கத்திலும், துரைசெல்வம் வீட்டிற்கும் பக்கத்திலும் உள்ள வீடுகளை சேர்ந்தவர்கள் எனக்கும், காசிநாதனுக்கும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் வேறு எனது உறவினர்கள் வீடுகள் எதுவும் இல்லை.

காசிநாதன் வீட்டிற்கும், துரைசெல்வம் வீட்டிற்கும் இடையே சுமார் 15 அடி

தொலைவு தான் இருக்கும். நாங்கள் அமர்ந்திருந்த வேப்பமர திண்ணையானது காசிநாதன் வீட்டை சேர்ந்தது. போலிசார் விசாரணையில் அந்த திண்ணையானது காசிநாதன் வீட்டினை சேர்ந்தது என்று நான் சொல்லவில்லை என்றால் வேப்பமரத்து திண்ணை என்று தான் சொல்லியிருக்கிறேன். அந்த திண்ணையை ஒட்டினார்போல் தண்ணீர் குழாய் இருக்கிறதா என்றால் இல்லை.

அந்த சமயத்தில் சிலவீடுகளுக்கு மட்டும் தனியாக தண்ணீர் குழாய் இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. மற்றபடி பொதுவான தண்ணீர் குழாய் இணைப்பு இருந்தது. காசிநாதன் வீட்டின் பின்புறம் அவர்களது வீட்டிற்கு கொடுக்கப்பட்டிருந்த தண்ணீர் குழாய் இருந்தது. சொந்தமாக தண்ணீர் குழாய் இணைப்பு வைத்திருந்தவர்களுக்கு தினசரி தண்ணீர் வழங்கப்படும் என்றால் சரிதான். பொதுகுழாய் இணைப்பிலும் தினசரி தண்ணீர் வரும்.

ராஜலிங்கம் எங்களை பார்த்து இங்கிருந்து ஓடிவிடுங்கள் என்று சொன்னதை கேட்டு நாங்கள் அங்கிருந்து ஓடியிருந்தால் என்னால் எந்தவொரு வழக்கு சம்பவத்தையும் பார்த்திருக்க முடியாது என்றால் சரியல்ல. ராஜலிங்கம் தப்பித்து ஓடியிருந்தால் அவரது வீட்டிற்குள் ஓடியிருப்பார் என்றும், துரைசெல்வம் வீட்டிற்குள் ஓடியிருக்கமாட்டார் என்றாலும் சரியல்ல. ராஜலிங்கம் துரைசெல்வம் வீட்டில்தான் தங்கியிருந்தார் என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

சம்பம் நடந்த தினத்தன்று நான் வேலைக்கு போய்விட்டேன் என்றாலும், ஊரில் இல்லை என்றாலும் சரியல்ல. நான் ராஜலிங்கம் வீட்டின் பின்புறம் ஒளிந்துகொண்டிருந்தால் நான் சொன்னதுபோல் சம்பவம் எதனையும் பார்த்திருக்க முடியாது என்றால் சரியல்ல . நான் சம்பவத்தை பார்த்தது உண்மை. நானும், அருளும் காசிநாதன் வீட்டிற்கு அன்றைய தினம் அரிசி கொண்டுபோகவில்லை என்றால் சரியல்ல.

சம்பவதினத்தன்று ராஜலிங்கமும், நானும் ஊரில் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நாங்கள் இருவரும் ஊரில் இருந்திருந்தால் சம்பவத்தை தடுப்பதற்கு முயற்சித்திருப்போம் என்றாலும், எங்களுக்கும் காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்றாலும்

சரியல்ல. காசிநாதன் குடும்பத்தினர் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்லுகிறேன் என்றால் இல்லை. எதிரிகளும் எனது உறவுகாரர்கள் என்று சாட்சி சுயமாக கூறுகிறார். 6 ஆம் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் கிடையாது என்றால் சரியல்ல.

**3 மற்றும் 8 ஆம் எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுகொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.